உதவி அமர்வு நீதிமன்றம், திண்டுக்கல்.
(தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்)
**முன்னிலை: – திருமதி. வா. தீபா, எம்.எல்.,**
உதவி அமர்வு நீதிபதி, திண்டுக்கல்.
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திண்டுக்கல்.
2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18–ம் நாள் சனிக்கிழமை
**அமர்வு வழக்கு எண்.** 381/2025
C.N.R. No.TNDG03–000052–2026
(முதல்நிலை விசாரணை வழக்கு எண். 11/2019)

தமிழக அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
செம்பட்டி காவல் நிலைய
குற்ற எண்.325/2010 ………… குற்றமுறையிடுபவர்.

/எதிர்/

1) சங்கர், வயது 24/2010
த/பெ. சண்முகம்,
தருமத்துப்பட்டி.

2) ராஜா, வயது 25/2010
த/பெ. பழனிச்சாமி,
தருமத்துப்பட்டி.

3) சிவணாண்டி, வயது 24/2010 (இறப்பு)
த/பெ. சிதம்பரம்,
குறும்பபட்டி.

4) மருதையா, வயது 27/2010
த/பெ. பிச்சை,
தருமத்துப்பட்டி. ……… எதிரிகள்.

எதிரிகள் மீதான குற்றம் : இவ்வழக்கின் புகார்தாரரான ராஜாராம் என்பவர் TN 57 K 6768 என்ற திண்டுக்கல் – சித்தரேவு செல்லும் தனியார் பேருந்தில் நடத்துனராகவும், அவருடன் ஜெயராம் என்ற ராமர் என்பவரும் நடத்துனராகவும், 4வது எதிரி மேற்படி பேருந்தின் ஓட்டுநராகவும் பணிபுரிந்து வந்துள்ளனர். மேற்படி நபர்கள் தங்களுக்கு விருப்பமான பாடலை

மேற்படி பேருந்திற்குள் ஒலி பரப்புவது தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டு அடிக்கடி தகராறு நடந்துள்ளது. எதிரிகள் நான்கு பேரும் புகார்தாரரைத் தாக்க வேண்டும் என சதித் திட்டம் தீட்டி, கடந்த 20.08.2010ம் தேதி மேற்படி TN 57 K 6766 என்ற பேருந்தை 4வது எதிரி ஓட்டி வர, புகார்தாரர் ராஜாராம் மற்றும் ஜெயராம் (எ) ராமர் ஆகியோர் மேற்படி பேருந்தில் நடத்துநராக பணிபுரிந்து கொண்டு மேற்படி பேருந்தில் திண்டுக்கல்லில் பயணிகளை ஏற்றிக் கொண்டு, இரவு 9.35 மணிக்கு புறப்பட்டு, சித்தரேவு நோக்கி செம்பட்டி ரோட்டில் சென்று கொண்டிருக்கும்போது, ஆதிலட்சுமிபுரம் பிரிவில் பஸ் ஸ்டாப்பில் பயணிகளை இறக்கிவிட்டு மேற்படி பேருந்தை 4வது எதிரி ஓட்டிச் சென்றபோது, 1 முதல் 3 எதிரிகள் தங்களது சதித் திட்டத்தை நிறைவேற்றும் முகமாக, திண்டுக்கல்லில் மேற்படி பேருந்தில் ஏறியவர்கள் மேற்படி பேருந்தின் பின்பக்க படிக்கட்டில் நின்று கொண்டிருந்தபோது, அன்று இரவு 10.00 மணியளவில், அவர்களைப் பார்த்து புகார்தாரரான ராஜாராம் பேருந்துக்குள் வந்து அமரும்படி கூறியபோது, 2வது எதிரி நீ சொல்லி நாங்க உட்கார மாட்டோம், நீ பெரிய ஆளாடா, எங்க மருதையுடன் நீங்க அடிக்கடி தகராறு செய்யிறீங்களாமே, மருதையா கூட பிரச்சனை வச்சிக்கிட்டா என்ன நடக்குமென்று இப்ப தெரியுமடா என்று சொல்லி 1வது எதிரியிடம் இவனை பஸ்சிலேயே குத்தி கொல்லுடா என்று தூண்டி விடவும், 1வது எதிரி இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து புகார்தாரரைப் பார்த்து உன்னை உயிரோடு விட்டாதாண்டா மருதையாகிட்ட மோதுவீங்க என்று சொல்லி அவரை கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில், இத்தோடு செத்து தொலைடா என்று சொல்லி கத்தியால் புகார்தாரரின் நடு முதுகில் குத்திக் காயத்தை ஏற்படுத்தியபோது, விலக்கச் சென்ற ஜெயராம் (எ) ராமரின் இடது

பக்க வயிற்றிலும், இடது முன்னங்கையிலும் மாறி மாறி குத்திக் காயத்தை ஏற்படுத்தியபோது, இறந்துபோன 3வது எதிரி கையில் வைத்திருந்த கத்தியைக் காட்டி பொதுமக்கள் யாரும் வந்து விலக்கக் கூடாது என்றும், வந்தால் குத்தி கொலை செய்து விடுவதாகவும் மிரட்டியுள்ளார். மேற்படி குற்ற செய்கைக்காக 1, 2 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 307(2 எண்ணிக்கைகள்), 120(பி)–ன் கீழும், 3வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 506(2), 307 (2 எண்ணிக்கைகள்) உ/இ 114, 115, 120(பி)–ன் கீழும், 4வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 307 (2 எண்ணிக்கைகள்), உ/இ 114, 115, 120(பி)ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார்கள் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

1, 2 மற்றும் 4 எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் : 1, 2 மற்றும் 4 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 120(B), 307 (2 எண்ணிக்கைகள்), 114, 115–ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது. 3வது எதிரி இறந்துவிட்டதால், அவர் மீதான வழக்கு அற்றுப்போய்விட்டது.

எதிரிகளின் வாதுரை : குற்றவாளிகள் இல்லை

நீதிமன்றத்தின் முடிவு : குற்றவாளிகள் இல்லை.

தீர்ப்பு : அரசு தரப்பில் 1, 2 மற்றும் 4 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 120(B), 307 (2 எண்ணிக்கைகள்), 114, 115–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி, 1, 2 மற்றும் 4 எதிரிகளை மேற்படி பிரிவின் கீழான குற்றச் சாட்டுக்களுக்கு குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, எதிரிகளை பிரிவு கு.வி.மு.ச பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

இந்த வழக்கில், இந்நீதிமன்ற R.P.R. No.05/2026–ல் கைப்பற்றப்பட்ட சா.பொ.1 சுமார் 42 ½ செ.மீ. நீளமுள்ள கத்தி ஒன்றை மேல் முறையீட்டு காலத்திற்குப் பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகின்றது.

இந்த வழக்கு என் முன்பாக 18.04.2026–ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் திரு. M. விஜயேந்திரன், கூடுதல் அரசு வழக்கறிஞர் அவர்களும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. I. ஆல்வின் ஜெகன் அவர்களும் முன்னிலையாகி வாதிட்டதைக் கேட்ட பின்னர், இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள் வரையில் இந்த நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இறுதியாக 18.04.2026–ம் தேதி அன்று விசாரணைக்கு வந்து, இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்த பின்னர், இன்று இந்த நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்

## தீர்ப்புரை

**1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :–**

இவ்வழக்கின் புகார்தாரரான ராஜாராம் என்பவர் TN 57 K 6768 என்ற திண்டுக்கல் – சித்தரேவு செல்லும் தனியார் பேருந்தில் நடத்துனராகவும், அவருடன் ஜெயராம் என்ற ராமர் என்பவரும் நடத்துனராகவும், 4வது எதிரி மேற்படி பேருந்தின் ஓட்டுநராகவும் பணிபுரிந்து வந்துள்ளனர். மேற்படி நபர்கள் தங்களுக்கு விருப்பமான பாடலை மேற்படி பேருந்திற்குள் ஒலி பரப்புவது தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டு அடிக்கடி தகராறு நடந்துள்ளது. எதிரிகள் நான்குபேரும் புகார்தாரரைத் தாக்க வேண்டும் என சதித் திட்டம் தீட்டி, கடந்த 20.08.2010–ம் தேதி மேற்படி TN 57 K 6766 என்ற பேருந்தை 4வது எதிரி ஓட்டி வர, புகார்தாரர் ராஜாராம் மற்றும் ஜெயராம் (எ) ராமர் ஆகியோர் மேற்படி பேருந்தில் நடத்துநராக பணிபுரிந்து கொண்டு மேற்படி பேருந்தில் திண்டுக்கல்லில்

பயணிகளை ஏற்றிக் கொண்டு, இரவு 9.35 மணிக்கு புறப்பட்டு, சித்தரேவு நோக்கி செம்பட்டி ரோட்டில் சென்று கொண்டிருக்கும்போது, ஆதிலட்சுமிபுரம் பிரிவில் பஸ் ஸ்டாப்பில் பயணிகளை இறக்கிவிட்டு மேற்படி பேருந்தை 4வது எதிரி ஓட்டிச் சென்றபோது, 1 முதல் 3 எதிரிகள் தங்களது சதித் திட்டத்தை நிறைவேற்றும் முகமாக, திண்டுக்கல்லில் மேற்படி பேருந்தில் ஏறியவர்கள் மேற்படி பேருந்தின் பின்பக்க படிக்கட்டில் நின்று கொண்டிருந்தபோது, அன்று இரவு 10.00 மணியளவில், அவர்களைப் பார்த்து புகார்தாரரான ராஜாராம் பேருந்துக்குள் வந்து அமரும்படி கூறியபோது, 2வது எதிரி நீ சொல்லி நாங்க உட்கார மாட்டோம், நீ பெரிய ஆளாடா, எங்க மருதையுடன் நீங்க அடிக்கடி தகராறு செய்யிறீங்களாமே, மருதையா கூட பிரச்சனை வச்சிக்கிட்டா என்ன நடக்குமென்று இப்ப தெரியுமடா என்று சொல்லி 1வது எதிரியிடம் இவனை பஸ்சிலேயே குத்தி கொல்லுடா என்று தூண்டி விடவும், 1வது எதிரி இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து புகார்தாரரைப் பார்த்து உன்னை உயிரோடு விட்டாதாண்டா மருதையாகிட்ட மோதுவீங்க என்று சொல்லி அவரை கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில், இத்தோடு செத்து தொலைடா என்று சொல்லி கத்தியால் புகார்தாரரின் நடு முதுகில் குத்திக் காயத்தை ஏற்படுத்தியபோது, விலக்கச் சென்ற ஜெயராம் (எ) ராமரின் இடது பக்க வயிற்றிலும், இடது முன்னங்கையிலும் மாறி மாறி குத்திக் காயத்தை ஏற்படுத்தியபோது, இறந்துபோன 3வது எதிரி கையில் வைத்திருந்த கத்தியைக் காட்டி பொதுமக்கள் யாரும் வந்து விலக்கக் கூடாது என்றும், வந்தால் குத்தி கொலை செய்து விடுவதாகவும் மிரட்டியுள்ளார். மேற்படி குற்ற செய்கைக்காக 1, 2 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 307(2 எண்ணிக்கைகள்), 120(பி)–ன் கீழும், 3வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 506(2), 307 (2 எண்ணிக்கைகள்) உ/இ 114, 115, 120(பி)–ன் கீழும், 4வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 307 (2 எண்ணிக்கைகள்), உ/இ 114, 115, 120(பி)ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம்

புரிந்துள்ளார்கள் என செம்பட்டி காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி குற்ற அறிக்கையை பரிசீலனை செய்து, முடிவில் இவ்வழக்கானது ஆத்தூர் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் PRC 11/2019 ஆக 17.12.2019-ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இவ்வழக்கின் எதிரிகள் ஆத்தூர் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் எதிரிகளுக்கு இவ்வழக்கில் ஆவணங்கள் அனைத்தும் கு.வி.மு.ச. 207 பிரிவின் கீழ் இலவசமாக வழங்கி பின்னர் இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து, எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களானது அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க குற்றச் சாட்டுக்கள் என்பதால், முதல் நிலை பதிவு வழக்கினை திண்டுக்கல், முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் குவிமுச பிரிவு 209(அ)ன் கீழ் விசாரணைக்காக சமர்ப்பித்துள்ளார்.

3. திண்டுக்கல், முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் இவ்வழக்கானது 16.12.2025-ம் தேதியன்று அமர்வு வழக்கு எண்.381/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்நீதிமன்றத்தில் எதிரிகள் ஆஜரானபோது, இருதரப்பினைக் கேட்டும், அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்தும், எதிரிகள் இறுதி அறிக்கையில் கண்டுள்ள குற்றத்தினை புரிந்திருக்கக் கூடும் என்று அனுமானிக்க போதிய ஆதாரங்கள் இருந்ததால், 1, 2 மற்றும் 4 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 120(B), 307 (2 எண்ணிக்கைகள்), 114, 115-ன் கீழும் எழுத்து மூலமான குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு தமிழில் விளக்கி கூறி வினவியபோது, எதிரிகள் தாங்கள்

குற்றவாளிகள் இல்லை என்று மறுத்தார்கள். எதிரிகள் குற்றத்தினை மறுத்த காரணத்தினால், இவ்வழக்கு அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டது. 3வது எதிரி இறந்துவிட்டதால், அவர் மீதான வழக்கு அற்றுப்போய்விட்டது.

4. அதன் பேரில் அரசுத் தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில், அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.13 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.18 வரையிலான சான்றாவணங்களும் மற்றும் சா.பொ.1 சான்று பொருளும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**5. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு :-**

I) இந்த வழக்கில் நிகர்நிலை புகார்தாரரான அ.சா.1 ராஜாராம், முதுநிலை வருவாய் ஆய்வாளர், தன்னுடைய சாட்சியத்தில், 4-ம் எதிரியை தனக்குத் தெரியும் என்றும், அவர் வாகன ஓட்டுநராக இருந்துள்ளார் என்றும், மற்ற எதிரிகளை தனக்குத் தெரியாது என்றும், தான் பழனிமுருகன் பேருந்தில் 15 ஆண்டுகளுக்கு முன்பாக நடத்துநராக வேலை பார்த்த போது, அவர் அதில் பேருந்து ஓட்டுநராக பணிபுரிந்து வந்தார் என்றும், 2010-ம் ஆண்டு அளவில் வக்கம்பட்டி தாண்டி தங்கள் பேருந்து போனபோது, நான்கு 20 முதல் 25 வயதுள்ள வாலிபர்கள் தங்கள் வண்டியில் ஏறினார்கள் என்றும், படியில் இருந்து உள்ளே வரச்சொல்லி தன்னுடன் இருந்த இன்னொரு நடத்துநர் சொன்னதற்கு அவர்கள் மறுத்துவிட்டதால், தான் அவர்களிடம் போய் என்ன சண்டை என்று கேட்டதற்கு படியில் நிற்கக்கூடாது என்று உள்ளே வரச்சொன்னதற்கு அந்த நான்கு நபர்களும் மற்ற பயணிகளிடமும் சண்டை போட்டுக் கொண்டு இருந்தார்கள் என்றும், அதை தடுப்பதற்காக தானும், ராமர் என்ற ஜெயராம் என்ற

நடத்துநரும் முயற்சி செய்து பயணிகளோடு அவர்கள் சண்டை போடுவதைத் தடுத்து அதில் ஒரு பயணியை உள்பக்கமாக இழுத்துச் சென்றபோது யாரோ தனது முதுகில் வலதுபக்கம் கத்தியால் குத்தியதாகவும், அதை தான் கவனிக்கவில்லை என்றும், பிறகு பயணிகளில் ஒருவர் முதுகில் இரத்தம் வருவதாகச் சொன்னவுடன்தான் கவனித்ததாகவும், தன்னோடு இருந்த நடத்துநர் ஜெயராமுக்கும் காயம் இருந்ததாகவும், அங்கிருந்து ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து தங்களை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து, அங்கு சிகிச்சைக்கு சேர்ந்தோம் என்றும் கூறியுள்ளார். புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், புகார் மனு யார் எழுதியது என்று தனக்குத் தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

ii) அ.சா2 ஜெயராம் என்பவர், 4-ம் எதிரியை தனக்குத் தெரியும் என்றும், அவர் வாகன ஓட்டுநர். மற்ற எதிரிகளை தனக்குத் தெரியாது என்றும், தான் பழனிமுருகன் பேருந்தில் 13 ஆண்டுகளுக்கு முன்பாக நடத்துநராக வேலை பார்த்த போது, மருதையா அதில் பேருந்து ஓட்டுநராக பணிபுரிந்து வந்தார் என்றும், இரவு 09.00 மணியளவில் (தேதி நினைவில்லை) வக்கம்பட்டி தாண்டி தங்கள் பேருந்து போனபோது, நான்கு நபர்கள் தங்களுக்குள் கத்தியை வைத்து தகராறு செய்து கொண்டு இருந்தார்கள் என்றும், அவர்கள் யார் என்று தனக்கு அடையாளம் தெரியாது என்றும், அவர்கள் போதையில் இருந்ததால் அருகே போகவில்லை என்றும், அ.சா. 1க்கு முதுகிலும், தனக்கு இடது பக்க இடுப்பிலும் கத்தியால் காயம் ஏற்பட்டதால், வண்டியை செம்பட்டி காவல் நிலையத்திற்கு விட்டுவிட்டதாகவும், அங்கிருந்து தங்களை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து, தாங்கள் சிகிச்சைக்கு சேர்ந்ததாகவும், இது சம்மந்தமாக யார் புகார் கொடுத்தார்கள் என்று தனக்குத் தெரியாது என்றும், எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் என்ன சம்மந்தம் என்று தனக்குத் தெரியாது என்றும் கூறியுள்ளார். அ.சா.3 பழனிக்குமார் என்பவர் ஆதிலட்சுமிபுரம்

பஸ்ஸ்டாண்ட் அருகே டீக்கடை வைத்திருந்ததாகவும், சம்பவம் குறித்து கேள்விப்பட்டு போய் பார்த்தபோது, ராஜாராம் மற்றும் ராமர் ஆகிய இரண்டு நடத்துநர்களும் காயமடைந்து இருந்ததாகவும் கூறியுள்ளார். அ.சா.4 சிவா மற்றும் அ.சா.5 சந்திரசேகர் மேற்படி பேருந்தில் பணயம் செய்தபோது, நடத்துநர்களுக்கும் பயணம் செய்தவர்களுக்கும் பிரச்சனை ஏற்பட்டு நடத்துநர்களை கத்தியால் குத்தி அவர்களை ஆம்புலன்சில் சிகிச்சைக்கு கொண்டு செல்லப்பட்டனர் என்றும், மேற்படி சம்பவம் குறித்து செம்பட்டி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்தது குறித்து சாட்சியமளித்துள்ளனர்.

iii) அ.சா.6 குணசேகரன், கிராம நிர்வாக அலுவலர் (பணி ஓய்வு) என்பவர் மேற்படி வழக்கு சம்பவம் குறித்து கேள்விப்பட்டது குறித்தும், எதிரிகள் மூன்று பேரையும் கைது செய்து காவல் ஆய்வாளர் தங்கள் முன்பாக கொண்டு வந்து, சங்கர் மற்றும் ராஜா ஆகிய இருவரிடமும், பின்னர் 2.00 மணிக்கு சிவனாண்டி என்பவரிடம் காவல் நிலையத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றும், அதன் அடிப்படையில் அத்தாட்சியில் சா.பொ.1 கத்தியை கைப்பற்றியதாக கூறியுள்ளார். அ.சா.7 பார்வை மகஜரில் கையொப்பம் செய்தது குறித்தும் கூறியுள்ளார்.

அ.சா.8 சவுந்தர்ராஜ், சிறப்பு சார்பு ஆய்வாளர் கடந்த 21.08.2010ம் தேதி தான் செம்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வளாராக பணியில் இருந்தபோது, அன்றைய தினம் காலை 3.00 மணிக்கு திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலைப் பெற்று மேற்படி மருத்துவமனை சென்று காலை 4.00 மணிக்கு ராஜாராம் என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவைப் பெற்று 5.00 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண்.325/2010 பிரிவுகள் 307 இ,.த.சவாக அ.சா.ஆ.7 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், மேற்படி புகார் மனுவை

நீதிமன்றத்திற்கும், அதன் பிரதிகளை மேல் அதிகாரிக்கும் மேற்கொண்டு விசாரணைக்காக அனுப்பி வைத்தாகவும் கூறியுள்ளார்.

iv) அ.சா.9 திருமதி.உமாதேவி, மனநல மருத்துவர் தன்னுடைய சாட்சியத்தில், கடந்த 20.08.2010ம் தேதி 11.25 மணிக்கு திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் அவசர சிகிக்சை பிரிவில் பணியில் இருந்தபோது, 32 வயதுள்ள ராஜாராம் மற்றும் ஜெயராம் ஆகியோர்களை பஸ் முதலாளி அழைத்து வந்தார் என்றும், அவர்களை பரிசோனை செய்து சிகிச்சை அளித்ததாகவும், அவர்களை ஆதிலட்சுமிபுரம் அருகே மூன்று நபர்கள் கத்தியால் தாக்கியதாக கூறினார்கள் என்றும், அவர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயம் என்று சான்று வழங்கியதாகவும் கூறியுள்ளார். அ.சா.10 தங்கவேல் என்பவர் சம்பவம் குறித்து கேள்விப்பட்டு, மறுநாள் காலை 10.00 மணிக்கு பேருந்தின் ஆவணங்களை எடுத்துக் கொண்டு செம்பட்டி காவல் நிலையத்திற்கு சென்று TN 57 K 6768 என்ற பேருந்தை காவல் நிலையத்தில் இருந்து மீட்டுக் கொண்டு வந்ததாகவும், அதை திண்டுக்கல் வட்டார போக்குவரத்து அலுவலரிடம் காண்பித்து தங்கள் லைனுக்கு மீண்டும் ஓட்டுவதற்காக கொண்டு சென்று விட்டதாகவும் கூறியுள்ளார்.

v) அ.சா.11 சண்முக பிரபு என்பவர் பழனி முருகன் என்ற பேருந்தில் 2010ம் வருடம் (தேதி ஞாபகம் இல்லை) தான் பயணம் செய்தபோது இரவு 9.30 மணிக்கு திண்டுக்கல் பேருந்து நிலையத்தில் இருந்து புறப்பட்டு ஆதிலட்சுமிபுரம் பேருந்து நிறுத்தத்தில் இரவு சுமார் 10.10 மணியளவில் வண்டி நின்றதாகவும், இரண்டுபேர் படியில் நின்று கொண்டே வந்தார்கள் என்றும், அவர்கள் கேட்கும் பாட்டை போடச் சொல்லி நடத்துநர்களை வம்பிழுத்துக் கொண்டே இருந்தார்கள் என்றும், அப்பொழுது பேருந்திற்குள் கூட்டம் இல்லை. நடத்துநர்கள் மேலே வரச்சொல்லி கூப்பிட்டபோது, பேசிக் கொண்டிருக்கும் பொழுதே கூர்மையான ஏதோ ஒரு பொருளை பாக்கெட்டில் இருந்து அந்த இரண்டு நபர்களும் எடுத்து ராஜாராம்

என்பவரை குத்தினார்கள் என்றும், அவர்களை பிடிக்க முயன்றபோது, அவர்கள் ஆத்தூர் ரோடு வழியாக ஓடிவிட்டார் என்றும் கூறியுள்ளார்.

vi) அ.சா.12 சுரேஷ்குமார் என்பவர் சம்பவம் குறித்து கேள்விப்பட்டு, சம்பவ இடம் சென்று பார்த்தது குறித்தும், 21.08.2010ம் தேதி காலை வண்டியின் ஆவணங்களை செம்பட்டி காவல் நிலையத்தில் சமர்பித்து, ஆவணங்கள் சரியாக இருந்ததால் வண்டியை விடுவித்தனர் என்றும் கூறியுள்ளார். அ.சா.13 சரவணன், காவல் ஆய்வாளர் தங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்த உதவி ஆய்வாளர் திரு. சௌந்தரராஜ் மற்றும் காவல் ஆய்வாளர் பொன். ரகு ஆகியோர்களை தனக்கு நன்கு தெரியும் என்றும், அவர்களில் பொன். ரகு தற்போது ஓய்வு பெற்றுவிட்டார் மற்றும் திரு.சௌந்திரராஜ் தற்போது வேறு மாவட்டத்தில் பணிபுரிந்து வருகிறார் என்பதால், அவர்களுடைய கையெழுத்து மற்றும் கையொப்பங்கள் தனக்கு நன்கு பரிட்சியம் என்பதால், வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.8 சிறப்பு சார்பு ஆய்வாளர் பதிவு செய்த வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்துள்ளார் என்றும், ஆய்வாளர் தனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினமே காலை 06.00 மணிக்கு சம்பவ இடமாகிய செம்பட்டி – திண்டுக்கல் ரோடு, ஆதிலட்சுமிபுரம் பேருந்து நிறுத்தம் சென்று சாட்சிகள் மகேந்திரன் மற்றும் கோபால் கிருஷ்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் அ.சா.ஆ.10 மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் செம்பட்டி காவல்நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த தனியார் பயணிகள் பழனி முருகன் பேருந்தை மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.11 மாதிரி வரைபடம் மற்றும் அ.சா.ஆ.12 பார்வை மகஜர் தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் அன்றைய தினமே காலை 08.00 மணிக்கு திண்டுக்கல் அரசு மருத்துவமனை சென்று இவ்வழக்கின் பாதிக்கப்பட்ட ராஜாராம் மற்றும் ஜெயராம் என்ற ராமர் ஆகியோர்களை விசாரித்து தனித்

தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் இவ்வழக்கின் பார்வை மகஜர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார் என்றும், அன்றைய தினம் காலை 11.00 மணிக்கு செம்பட்டி, ஆத்தூர் பிரிவு அருகே எதிரிகள் இருப்பதாக கிடைத்த தகவலின்பேரில் அங்கு சென்று, இவ்வழக்கின் எதிரிகள் 1. சங்கர், 2. ராஜா, 3. சிவனாண்டி ஆகியோரை கைது செய்துள்ளார் என்றும், அப்போது அந்த வழியாக வந்த ஆத்தூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.குணசேகரன் மற்றும் கிராம உதவியாளர் காளியப்பன் ஆகியோர்களை சாட்சியாக நியமித்து மூன்று எதிரிகளும் தானாக முன் வந்து தனித்தனியாக கொடுத்த மூன்று ஒப்புதல் வாக்குமூலங்களை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்துள்ளார் என்றும், அதில் 1-ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்று 13.30 மணிக்கு செம்பட்டி – ஒட்டன்சத்திரம் ரோட்டில் உள்ள குடகனாறு பாலத்திற்கு அருகில் உள்ள முட்புதருக்குள் மறைத்து வைக்கப்பட்டு இருந்த கத்தியை 1-வது எதிரி எடுத்து ஆஜர் செய்ததை அ.சா.ஆ.14 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார் என்றும், பின்னர் சாட்சிகள், எதிரிகள் மற்றும் எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சொத்துடன் 14.00 மணிக்கு செம்பட்டி காவல்நிலையம் வந்து பாரா வசம் ஒப்படைத்து மேற்படி வழக்கு சொத்தை அ.சா.ஆ.15 படிவம் – 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், 14.15 மணிக்கு இவ்வழக்கின் 4-வது எதிரி மருதையா என்பவரை காவல் நிலையம் முன்பு வைத்து கைது செய்து மேற்படி சாட்சிகளாகிய ஆத்தூர் கிராம நிர்வாக அலுவலர் திரு. குணசேகரன் மற்றும் கிராம உதவியாளர் காளியப்பன் ஆகியோர்களின் முன்னிலையில் 4-ம் எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், 2 மற்றும் 4-ம் எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் எந்த வழக்குச் சொத்தும் கைப்பற்றபடவில்லை என்றும், பின்னர் சாட்சிகளை தனித் தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்து அன்றைய தினமே எதிரிகள் நான்கு பேரையும் நீதின்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும்,

22.08.2010ம் தேதி சாட்சிகள் பாலகிருஷ்ணன், சண்முகபிரபு, பாப்பையா, பழனிக்குமார் மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. சௌந்திரராஜன் ஆகியோரை மற்றும் மருத்துவர் ஆகியோர்களை தனித் தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார் என்றும், இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 307 இ.த.ச.வில் இருந்து, பிரிவுகள் 307 (2எண்ணிக்கை), 506(ii), 114, 115, 120(b) இ.த.ச.வாக பிரிவு மாறுதல் செய்து அ.சா.ஆ.18 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை சமர்பித்தும், மேற்படி வழக்கின் புலன் விசாரணையை முடித்து 08.06.2012ம் தேதி எதிரிகள் மீது பிரிவுகள் 307(2 எண்ணிக்கை), 506(ii), 114, 115, 120(b) இ.த.ச.வின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும், அ.சா.13 சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசுதரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

6. இந்த வழக்கில் அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து இந்த எதிரிகளுக்குப் பாதகமாகத் தோன்றிய சங்கதிகளை குறித்து எதிரிகளிடம் பிரிவு 351 BNSS–ன் கீழ் விசாரணை செய்தபோது, எதிரிகள் அரசுத்தரப்பு சாட்சிகள் கூறுவது பொய் என்றும், பொய் வழக்குப் போடப்பட்டுள்ளதாகவும், தங்களது தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் கூறியுள்ளார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாததால், விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

7. தற்போது இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை என்னவென்றால், இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச் சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

8. இந்த வழக்கில் அரசு தரப்பில் முன்னிலையான அரசு தரப்பு கூடுதல் குற்றத்துறை வழக்கறிஞர் முன்வைத்த வாதங்களும், எதிரிகள் தரப்பில்

ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் முன் வைத்த வாதங்களும் இந்நீதிமன்றத்தால் கவனமாக கருத்தில் கொள்ளப்பட்டன.

## தீர்வு:–

9. அரசுதரப்பு வழக்கில், இவ்வழக்கின் புகார்தாரரான ராஜாராம் என்பவர் TN 57 K 6768 என்ற திண்டுக்கல் – சித்தரேவு செல்லும் தனியார் பேருந்தில் நடத்துனராகவும், அவருடன் (அ.சா.2) ஜெயராம் என்ற ராமர் என்பவரும் நடத்துனராக பணிபுரிந்து வந்துள்ளனர். 4வது எதிரி மேற்படி பேருந்தின் ஓட்டுநராக பணியாற்றி வந்துள்ளார். மேற்படி நடத்துனர்கள் ராஜாராம், ஜெயராம் என்ற ராமர் மற்றும் 4வது எதிரி மருதையா ஆகியோர் தங்களுக்கு விருப்பமான பாடலை மேற்படி பேருந்திற்குள் ஒலி பரப்புவது தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டு அடிக்கடி தகராறு நடந்துள்ளது என்றும், எதிரிகள் நான்குபேரும் புகார்தாரரைத் தாக்க வேண்டும் என சதித் திட்டம் தீட்டி, கடந்த 20.08.2010–ம் தேதி மேற்படி TN 57 K 6766 என்ற பேருந்தை 4வது எதிரி ஓட்டி வர, புகார்தாரர் ராஜாராம் மற்றும் ஜெயராம் (எ) ராமர் ஆகியோர் மேற்படி பேருந்தில் நடத்துநராக பணிபுரிந்து கொண்டு மேற்படி பேருந்தில் திண்டுக்கல்லில் பயணிகளை ஏற்றிக் கொண்டு, இரவு 9.35 மணிக்கு புறப்பட்டு, சித்தரேவு நோக்கி செம்பட்டி ரோட்டில் சென்று கொண்டிருக்கும்போது, ஆதிலட்சுமிபுரம் பிரிவில் பஸ் ஸ்டாப்பில் பயணிகளை இறக்கிவிட்டு மேற்படி பேருந்தை 4வது எதிரி ஓட்டிச் சென்றபோது, 1 முதல் 3 எதிரிகள் தங்களது சதித் திட்டத்தை நிறைவேற்றும் முகமாக, திண்டுக்கல்லில் மேற்படி பேருந்தில் ஏறியவர்கள் மேற்படி பேருந்தின் பின்பக்க படிக்கட்டில் நின்று கொண்டிருந்தபோது, அன்று இரவு 10.00 மணியளவில், அவர்களைப் பார்த்து புகார்தாரர் ராஜாராம் (அ.சா.1) என்பவர் பேருந்துக்குள் வந்து அமரும்படி கூறியபோது, 2வது எதிரி நீ சொல்லி நாங்க உட்கார மாட்டோம், நீ பெரிய ஆளாடா, எங்க மருதையுடன் நீங்க அடிக்கடி தகராறு செய்யிறீங்களாமே, மருதையா கூட பிரச்சனை வச்சிக்கிட்டா என்ன நடக்குமென்று இப்ப தெரியுமடா என்று சொல்லி 1வது எதிரியிடம் இவனை பஸ்சிலேயே குத்தி

கொல்லுடா என்று தூண்டி விடவும், 1வது எதிரி இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து புகார்தாரரைப் பார்த்து உன்னை உயிரோடு விட்டாதாண்டா மருதையாகிட்ட மோதுவீங்க என்று சொல்லி அவரை கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில், இத்தோடு செத்து தொலைடா என்று சொல்லி கத்தியால் புகார்தாரரின் நடு முதுகில் குத்திக் காயத்தை ஏற்படுத்தியபோது, விலக்கச் சென்ற ஜெயராம் (எ) ராமரின் இடது பக்க வயிற்றிலும், இடது முன்னங்கையிலும் மாறி மாறி குத்திக் காயத்தை ஏற்படுத்தியபோது, 3வது எதிரி கையில் வைத்திருந்த கத்தியைக் காட்டி பொதுமக்கள் யாரும் வந்து விலக்கக் கூடாது என்றும், வந்தால் குத்தி கொலை செய்து விடுவதாகவும் மிரட்டியதாக இந்த வழக்கின் நிகர்நிலை புகார்தாரரான அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலத்தின் பேரில் செம்பட்டி காவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து, விசாரணை மேற்கொள்ளப்பட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

10. அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.13 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.18 வரையிலான சான்றாவணங்களும் மற்றும் சா.பொ.1 சான்று பொருளும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

11. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் முறையாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்று பரிசீலிக்கையில், இந்த வழக்கில் காயம்பட்ட நபரான அ.சா.1 சம்பவம் பற்றியும், தனக்கும், அ.சா.2க்கும் ஏற்பட்ட காயம் குறித்தும் புகார் கொடுத்தது பற்றியும் கூறும் சாட்சியாகவும், அ.சா.1, அ.சா.2 ஆகியோருக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்தும் சம்பவம் பற்றியும் கூறும் சாட்சியாக அ.சா.4, அ.சா.5

ஆகியோர் காட்டப்பட்டுள்ளனர். அ.சா.3, அ.சா.6, அ.சா.10, அ.சா.11, அ.சா.12 ஆகியோர் சம்பவம் குறித்து கேள்விப்பட்டது குறித்தும், அ.சா.7 பார்வை மகஜரில் கையொப்பம் செய்தது குறித்தும், அ.சா.8 சிறப்பு சார்பு ஆய்வாளர் மருத்துவமனைக்கு சென்று புகார் மனு பெற்று வழக்கு பதிவு செய்து வழக்கு கோப்பை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தது குறித்தும், அ.சா.9 மருத்துவர், காயம்பட்டவர்களுக்கு சிகிச்சையளித்து காயச்சான்று வழங்கியது குறித்து கூறும் சாட்சியாகவும், அ.சா.13 காவல் ஆய்வாளர் கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டு, இவ்வழக்கினை புலன் விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளிப்பவராகவும், மேற்படி சங்கதிகள் குறித்து சாட்சியம் அளிப்பவர்களாக மேற்படி சாட்சிகள் சாட்சிப் பட்டியலில் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள்.

12. இந்த வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட நபர்களான அ.சா.1 மற்றும் அ.சா.2, ஆகியோர் இந்த வழக்கிற்கு மிக முக்கியமான சாட்சிகளாவார்கள். மேற்படி அ.சா.1–ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், எதிரிகளில் 4ம் எதிரியை தனக்குத் தெரியும் என்றும், அவர் வாகன ஓட்டுநர் என்றும், மற்ற எதிரிகளைத் தனக்குத் தெரியாது என்றும், தான் பழனி முருகன் பேருந்தில் 15 ஆண்டுகளுக்கு முன்பாக நடத்துநராக வேலை பார்த்தபோது, அவர் அதில் பேருந்து ஓட்டுநராக பணிபுரிந்து வந்தார் என்றும், 2010ம் ஆண்டு வக்கம்பட்டி தாண்டி தங்கள் பேருந்து போனபோது, நான்கு 20 முதல் 25 வயதுள்ள வாலிபர்கள் தங்கள் வண்டியில் ஏறினார்கள் என்றும், படியில் இருந்து உள்ளே வரச்சொல்லி தன்னுடன் இருந்த இன்னொரு நடத்துநர் சொன்னதற்கு அவர்கள் மறுத்துவிட்டார்கள் என்றும், தானும் உள்ளே வரச் சொன்னதாகவும், அந்த நான்கு நபர்களும் மற்ற பயணிகளிடமும் சண்டை போட்டுக் கொண்டு இருந்தார்கள் என்றும், அதை தடுப்பதற்காக தானும், ராமர் (எ) ஜெயராம் என்ற நடத்துநரும் முயற்சி செய்ததாகவும், தான் பயணிகளோடு அவர்கள் சண்டை

போடுவதை தடுத்து, அதில் ஒரு பயணியை உள்பக்கமாக இழுத்துச் சென்றபோது, யாரோ தனது முதுகில் வலது பக்கம் கத்தியால் குத்தியதாகவும், அதை தான் கவனிக்கவில்லை என்றும், பயணிகளில் ஒருவர் முதுகில் இரத்தம் வருவதாக சொன்னவுடன்தான் கவனித்ததாகவும், தன்னோடு இருந்த நடத்துநர் ஜெயராமுக்கும் காயம் இருந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அவரது குறுக்கு விசாரணையை பரிசீலனை செய்கையில், "எனக்கு ஏற்பட்ட காயம் எப்படி, யாரால் ஏற்பட்டது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான்." என்று சாட்சியமளித்துள்ளார்.

13. இந்த வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட மற்றொரு நபரான அ.சா.2ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், 4–ம் எதிரியை தனக்குத் தெரியும் என்றும், அவர் வாகன ஓட்டுநர் என்றும், மற்ற எதிரிகளை தனக்குத் தெரியாது என்றும், தான் பழனிமுருகன் பேருந்தில் 13 ஆண்டுகளுக்கு முன்பாக நடத்துநராக வேலை பார்த்த போது, மருதையா அதில் பேருந்து ஓட்டுநராக பணிபுரிந்து வந்தார் என்றும், இரவு 09.00 மணியளவில் (தேதி நினைவில்லை) வக்கம்பட்டி தாண்டி தங்கள் பேருந்து போனபோது, நான்கு நபர்கள் தங்களுக்குள் கத்தியை வைத்து தகராறு செய்து கொண்டு இருந்தார்கள் என்றும், அவர்கள் யார் என்று தனக்கு அடையாளம் தெரியாது என்றும், அவர்கள் போதையில் இருந்ததால் அருகே போகவில்லை என்றும், அ.சா. 1க்கு முதுகிலும், தனக்கு இடது பக்க இடுப்பிலும் கத்தியால் காயம் ஏற்பட்டதால், வண்டியை செம்பட்டி காவல் நிலையத்திற்கு விட்டுவிட்டதாகவும் கூறியுள்ளார். அவரது குறுக்கு விசாரணையில், " எனக்கு ஏற்பட்ட காயம் எப்படி, யாரால் ஏற்பட்டது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தின்போது, எதிரி மருதையா டிரைவர் சீட்டில் தான் இருந்தார் என்றால் சரிதான். அவருக்கும், இந்த சண்டைக்கும் சம்பந்தம் கிடையாது என்றால் சரிதான்," என்று சாட்சியமளித்துள்ளார்.

14. மேற்படி அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரின் சாட்சியங்களைப் பொறுத்தவரையில், சம்பவத்தின்போது, 4வது எதிரி மேற்படி பேருந்தின் ஓட்டுநராக அவரது ஓட்டுநர் இருக்கையில் இருந்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. மற்ற எதிரிகளைத் தங்களுக்குத் தெரியாது என்றும், யாரோ தனது முதுகில் வலது பக்கம் கத்தியால் குத்தியதாகவும், அதை தான் கவனிக்கவில்லை என்றும், பயணிகளில் ஒருவர் முதுகில் இரத்தம் வருவதாக சொன்னவுடன் தான் கவனித்ததாகவும் அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ளார். அதேபோல், அ.சா.2–ம் நான்கு நபர்கள் தங்களுக்குள் கத்தியை வைத்து தகராறு செய்து கொண்டு இருந்ததாகவும், அவர்கள் யார் என்று அடையாளம் தெரியாது என்று கூறியுள்ளார். இருவருமே தங்களுக்கு ஏற்பட்ட காயம் எப்படி, யாரால் ஏற்பட்டது என்று தங்களுக்குத் தெரியாது என்றும் கூறியுள்ளார்கள்.

15. அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரின் சாட்சியத்துடன், அ.சா.9 மருத்துவரின் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், 20.08.2010ம் தேதி இரவு 10.20 மணிக்கு ஆதிலட்சுமிபுரம் அருகே மூன்று நபர்கள் கத்தியால் தாக்கியதாக கூறினார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார். மேற்படி மருத்துவரிடம் மூன்று நபர்கள் கத்தியால் தாக்கியதாக கூறியுள்ள நிலையில், இந்த வழக்கில் 4 பேர் எதிரிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். இதில் 4வது எதிரி இந்த வழக்கு சம்பவம் ஏற்பட்ட தனியார் பேருந்தின் ஓட்டுநராவார். சம்பவத்தின் போது 4வது எதிரி டிரைவர் சீட்டில் தான் இருந்தார் என்பதை அ.சா.2 ஒப்புக் கொண்டுள்ளார். எனவே, 4வது எதிரியைப் பொறுத்த வரையில், அவருக்கும் அ.சா.1 மற்றும் அ.சா.2க்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்ததா என்பதும், அவர் வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டாரா என்பதும் சந்தேகத்திற்குரியதாகவே உள்ளது. மற்ற மூன்று எதிரிகளைப் பொறுத்த வரையில், அவர்களைத் தெரியாது என்றும், மருத்துவரிடமும் எதிரிகளின் அடையாளம் குறித்து கூறாத நிலையில், வழக்கு

குற்ற சம்பவத்தில் எதிரிகள் ஈடுபட்டார்கள் என்பது குறித்து, மேற்படி மூவரின் சாட்சியங்களுமே அரசுதரப்பு வழக்கினை மிகவும் பலவீனப்படுத்தும் வகையிலேயே அமைந்துள்ளது.

16. சம்பவம் நடந்த பேருந்தில் பயணம் செய்த பயணியான அ.சா.11 தன்னுடைய சாட்சியத்தில், இரண்டு பேர் படியில் நின்று கொண்டே வந்தார்கள் என்றும், அவர்கள் கேட்கும் பாட்டை போடச் சொல்லி நடத்துநர்களை வம்பிழுத்துக் கொண்டு இருந்தார்கள் என்றும், நடத்துநர்கள் மேலே வரச் சொல்லி கூப்பிட்டார்கள் என்றும், பேசிக் கொண்டிருக்கும்போதே கூர்மையான ஏதோ ஒரு பொருளை பாக்கெட்டில் இருந்த அந்த இரண்டு நபர்களும் எடுத்து ராஜாராம் நடத்துநரை குத்தினார்கள் என்றும் கூறியுள்ளாார். மேற்படி அ.சா.11ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், இரண்டு நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளார். ஆனால், வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக 4 நபர்களை எதிரிகளாக அரசு தரப்பில் சேர்த்து வழக்கு நடத்தப்பட்டுள்ள நிலையில், அ.சா.1 மற்றும், அ.சா.2 ஆகியோர் மருத்துவரிடம் மூன்று நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளார்கள். மேற்படி எத்தனை நபர்கள் வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்பது குறித்து ஒருவருக்கொருவர் முரண்பட்டு சாட்சியமளித்துள்ள நிலையிலும், வழக்கின் எதிரிகள் தான் இந்த வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்பது குறித்து சாட்சியம் எதையும் அளிக்காத நிலையிலும், அவர்களது சாட்சியம் அரசு தரப்பு வழக்கினை பாதிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது.

17. போலீசார் சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் தயார் செய்ததில் அதில் கையொப்பமிட்ட சாட்சியாக அ.சா.7 விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவரது சாட்சியத்தில் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை செய்து வரைபடம் வரைந்தார்கள் என்றும், பார்வை மகஜரில் தான் கையொப்பம் செய்ததாக கூறியுள்ளார். அவரது சாட்சியத்திலிருந்து போலீசார் சம்பவ இடம் சென்று

பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்கள் என்பது தெரிய வருகிறது. அ.சா.6 ஒப்புதல் வாக்கு மூலத்தில் கையொப்பம் செய்தது குறித்து சாட்சியமளித்துள்ளார். அவர் சம்பவம் நடந்தது மற்றும் ஒப்புதல் வாக்கு மூலம் வாங்கிய இடம் எதுவும் தங்கள் அலுவலகத்திற்கு கட்டுப்பட்டது அல்ல என்றும், போலீசார் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் தான் கையொப்பம் செய்ததாகவும் சொல்லியுள்ளார். செம்பட்டி காவல் நிலையத்தில் வைத்து தான் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்றும், 21.08.2009 ஆம் தேதி தான் ஒப்புதல் வாக்கு மூலம் பெறப்பட்டது என்றும் சொல்லியுள்ளதன் அடிப்படையில் பார்க்கும் போது, இவ்வழக்கில் எதிரிகள் கைது செய்யப்பட்டதும், புலன் விசாரணையும் முறையாக கடைபிடிக்கப்பட்டதா என்ற ஐயம் இந்நீதிமன்றத்திற்கு ஏற்படுகின்றது.

18. இந்த வழக்கில் அ.சா.1 கொடுத்த அ.சா.ஆ.1 புகார் மனுவினைப் பொறுத்த வரையில், புகார் மனு யார் எழுதியது என்று தனக்குத் தெரியாது என்று கூறியுள்ளார். மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த அ.சா.1 கொடுத்த புகார் மனுவினைப் பெற்று வழக்கு பதிவு செய்த அ.சா.8 சிறப்பு சார்பாய்வாளின் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், ராஜாராம் (அ.சா.1) கொடுத்த புகார் மனுவினைப் பெற்று வழக்கு பதிவு செய்ததாக அவரது முதல் விசாரணையில் கூறியுள்ளார். குறுக்கு விசாரணையை பரிசீலனை செய்கையில், புகார் மனுவை தான் போகும் பொழுதே ராஜாராம் எழுதி வைத்திருந்தார் என்றால் சரிதான் என்றும், அதை யார் எழுதினார்கள் என்ற விபரம் தனக்குத் தெரியாது என்றால் சரிதான் என்றும், புகார் மனுவினைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததைத் தவிர வேறு எந்த விபரமும் தனக்குத் தெரியாது என்றால் சரிதான் என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.1, புகார் மனுவினை யார் எழுதினார்கள் என்றால் தெரியாது என்றும், அ.சா.8 சிறப்பு சார்பாய்வாளர், அ.சா.1 கொடுத்த புகார் மனுவினைப் பெற்று வழக்கு பதிவு செய்ததாகவும் கூறியுள்ள

நிலையில், மேற்படி இருவரின் சாட்சியமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு கூறியுள்ள நிலையில், புகாரின் உண்மைத் தன்மை குறித்து பெருத்த சந்தேகத்தை எழுப்புகிறது.

19. கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.13–ஐ பொறுத்த வரையில், வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் அவரது முதல் விசாரணை சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கினை புலன் விசாரணை செய்து எதிரிகள் மீது முதல்நிலை வழக்கு உள்ளது என்பதால், அவர்கள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அவரது குறுக்கு விசாரணையை பரிசீலனை செய்கையில், ஒப்புதல் வாக்குமூலத்தை எழுதிய நபரை இந்த வழக்கில் சாட்சியாக போடவில்லை என்றால் சரிதான் என்றும், கைப்பற்றப்பட்ட சான்று பொருளான கத்தி ரசாயன பகுப்பாய்விற்கு அனுப்படவில்லை என்றால் சரிதான் என்றும், காயம்பட்ட நபர்களிடமிருந்து இரத்தக் கறைபட்ட ஆடைகளை கைப்பற்றவில்லை என்றால் சரிதான் என்றும் ஏற்றுக் கொண்டுள்ளார்.

20. மேலே விவாதிக்கப்பட்டபடி அரசு தரப்பு வழக்கினை நிரூபிக்கும் அளவிற்கு காயம்பட்ட நபர்களான அ.சா.1 மற்றும் அ.சா.2, ஆகியோர் எதிரிகளின் அடையாளம் குறித்து சாட்சியமளிக்காத நிலையிலும், பேருந்தில் பயணம் செய்த சாட்சிகளும், பேருந்தில் கூட்டமான இருந்ததால், யார் யாரைத் தாக்கினார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது என்று கூறியுள்ள நிலையில், எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களைப் பொறுத்து, அதை அவர்கள் தான் செய்தார்களா என்பதை புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து முடிவு செய்துவிடலாகாது. அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் தகுந்த மற்றும் நீதிமன்றம் ஏற்கும் படியான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை முன்னிலைப்படுத்தி, நியாயமான சந்தேகங்களுங்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

அ.சா.13 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியமானது அவர் தனது அரசு பணியைச் செய்யும் போது, சொல்லப்பட்ட ஒன்றாகவே கருத இயலும். எனவே, எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்கள் குறித்து அரசு தரப்பில் போதிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக்கி தீர்ப்பு அளிப்பது தான் நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

21. இறுதியாக மேலே விவரிக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் வழக்கை பரிசீலிக்கின்றபோது, அரசு தரப்பில் 1, 2 மற்றும் 4 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 120 (B), 307 (2 எண்ணிக்கைகள்), 114, 115-ன் கீழான குற்றச்சாட்டுக்கள் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி, 1, 2 மற்றும் 4 எதிரிகளை மேற்படி பிரிவுகளின் கீழான குற்றச் சாட்டுக்களுக்கு குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, எதிரிகளை பிரிவு கு.வி.மு.ச பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

22. இந்த வழக்கில், இந்நீதிமன்ற R.P.R. No.05/2026-ல் கைப்பற்றப்பட்ட சா.பொ.1 சுமார் 42 ½ செ.மீ. நீளமுள்ள கத்தி ஒன்றை மேல் முறையீட்டு காலத்திற்குப் பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகின்றது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழைகள் நீக்கப்பட்டு, இன்று 2026-ம் வருடம் ஏப்ரல் மாதம் 18-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.04.18 16:11:24 +0530

உதவி அமர்வு நீதிபதி,
(தலைமை நீதித்துறை நடுவர்)
திண்டுக்கல்.

**<u>அரசுத் தரப்புச் சாட்சிகள்:–</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. ராஜாராம் |
| அ.சா.2 | திரு. ஜெயராம் |
| அ.சா.3 | திரு. பழனிக்குமார் |
| அ.சா.4 | திரு. சிவா |
| அ.சா.5 | திரு. சந்திரசேகர் |
| அ.சா.6 | திரு. குணசேகரன் |
| அ.சா.7 | திரு. மகேந்திரன் |
| அ.சா.8 | திரு. சவுந்தரராஜ், சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| அ.சா.9 | திருமதி. உமாதேவி, மனநல மருத்துவர். |
| அ.சா.10 | திரு. தங்கவேல் |
| அ.சா.11 | திரு. சண்முக பிரபு |
| அ.சா.12 | திரு. சுரேஷ்குமார் |
| அ.சா.13 | திரு. சரவணண், காவல் ஆய்வாளர் (கூடுதல் சாட்சி) |

**<u>அரசுத் தரப்புச் சான்றாவணங்கள்:–</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 21.08.2010 | தேதியிட்ட புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 21.08.2010 | தேதியிட்ட 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அ.சா.6ன் கையொப்பம் மட்டும். |
| அ.சா.ஆ.3 | 21.08.2010 | தேதியிட்ட 2வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அ.சா.6ன் கையொப்பம் மட்டும். |
| அ.சா.ஆ.4 | 21.08.2010 | தேதியிட்ட 4வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அ.சா.6ன் கையொப்பம் மட்டும். |
| அ.சா.ஆ.5 | 21.08.2010 | தேதியிட்ட அத்தாட்சியிலுள்ள அ.சா.6ன் கையொப்பம மட்டும். |
| அ.சா.ஆ.6 | 21.08.2010 | தேதியிட்ட பார்வை மகஜர்–1 |
| அ.சா.ஆ.7 | 21.08.2010 | தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.8 | 20.08.2010 | தேதியிட்ட விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று (ராஜாராம்) |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.9 | 20.08.2010 | தேதியிட்ட விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று (ஜெயராம்) |
| அ.சா.ஆ.10 | 21.08.2010 | தேதியிட்ட மாதிரி வரைபடம் –1 |
| அ.சா.ஆ.11 | 21.08.2010 | தேதியிட்ட பார்வை மகஜர்–2 |
| அ.சா.ஆ.12 | 21.08.2010 | தேதியிட்ட மாதிரி வரைபடம் –2 |
| அ.சா.ஆ.13 | 21.08.2010 | தேதியிட்ட 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும். |
| அ.சா.ஆ.14 | 21.08.2010 | தேதியிட்ட அத்தாட்சி |
| அ.சா.ஆ.15 | 21.08.2010 | தேதியிட்ட படிவம் 91 |
| அ.சா.ஆ.16 | 21.08.2010 | தேதியிட்ட 2வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் |
| அ.சா.ஆ.17 | 21.08.2010 | தேதியிட்ட 4வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் |
| அ.சா.ஆ.18 | – | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**அரசுதரப்பு சான்று பொருள் :**

சா.பொ.1 சுமார் 42 ½ செ.மீ. நீளமுள்ள கத்தி ஒன்று.

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும், சான்றாவணம் :** இல்லை

**எதிரிகள் தரப்பு சான்று பொருள் :** இல்லை

**குறிப்பு:–**

1. இந்த வழக்கில் எந்த சாட்சியும் மூன்று முறைக்கு மேல் விசாரணைக்கு அழைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கின் முடிவு குறித்து இரு தரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
3. சொத்து பற்றிய உத்தரவு உரிய பதிவேட்டில் பதிய உத்தரவிடப்பட்டது.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.04.18 16:11:04 +0530

உதவி அமர்வு நீதிபதி,
(தலைமை நீதித்துறை நடுவர்)
திண்டுக்கல்.